முருகப்பெருமான் துணை

**மகான் தூர்வாசமுனிவர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

10.12.2022, சனிக்கிழமை

1. அவதார ஞான வள்ளலே
ஆறுமுகனார் சூட்சும வடிவான
அவதார ஆறுமுக அரங்கனே
அவனியில் உன் அவதாரம் மெச்சி
2. மெச்சியே அனுகூல ஆசிதனை
மேலான சுபகிருது தேள்திங்கள்
அச்சமிலா அறுநான்கு திகதி காரி வாரம்
(சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 24 ம் நாள் 10.12.2022, சனிக்கிழமை)
அறிவிப்பேன் தூர்வாச முனிவர் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயிர்கொலை நீக்கி வாழும்
ஞானம் தரும் அரங்கமகானே
நம்பிக்கை தரும் ஞானியாகும்
4. ஆகவே ஞானியர் காட்டும்
ஆக்கப்பூர்வ சேவைதனை
செகத்தார் வரவேற்று நன்கு
செயலாக்கித் தொடர்ந்துவர
5. வருகவே உலகம் எங்கிலும்
வள்ளல் தன்மை பரவியே
முருகப்பெருமானின் அனுகூலம்
முழுமை ஞானமாக மாறியே
6. மாறியே மக்களிடை நற்சிந்தை
மனபலம் தேகபலமுமாகக்கூடி
தெரியவரும் பிறப்பின் நோக்கம்
தெய்வபலமாக அவரவர்க்கு உள்ளும்
7. உள்ளுமாக மகா சக்தி நிரம்பி
உயர் வழிபாடாக அனுதினமும்
வள்ளல் தன்மை வல்லமை கொண்ட
வடிவேலனார் வழிபாடு நிறைந்து
8. நிறைந்துமே ஞானவான் எனும்
நிலைத்தன்மை கொண்ட வரம்
குறைவின்றி அரங்கமகா ஞானியால்
குவலயத்தில் அனைவருக்கும் கிட்டி
9. கிட்டியே கிரக இடர்வழி வரும்
குற்றங்கள் இன்னல்கள் யாவும்
கட்டமிலா விலகி இனிதே உலகோர்
கருணைபட பாதுகாப்புமிக்க

10. மிக்கநல் ஞானவாழ்வாக அடைந்து
மண்ணுலகில் சிறப்பு காண்பர்
தேக்கமின்றி காரிய வெற்றிகளும்
தெய்வ நிலை கண்டு சிறந்து

11. சிறந்துமே ஞானபலம் கொண்ட
சிறப்பான தலைமைகளை உருவாக்கி
பரந்தப் பேருலகில் ஞான ஆட்சிபடைப்பர்
பாடிவந்த அனுகூல ஆசி முற்றே

–சுபம்–